செயற்பொறியாளர், பொபது., தரக்கட்டுப்பாடு கோட்டம், திருச்சி – 20.
அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு. பெ. மாணிக்கம், D.C.R.E.,
செயற்பொறியாளர், பொபது.,

30/7/20

**செ.மு.எண். நிஎ1/(273/ 2019) /2020 / நாள்: 29.07.2020.**

பொருள்: பணியமைப்பு – பொபது., - த.நா.அ.பணித் தொகுதி – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018ஆம் ஆண்டுகளுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு (தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய வரிசை எண்:133/2015-2018) பணிபுரிந்து வரும் V. அகிலா பொன்மணி, (பி.தே.07.06.1994) என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும் மற்றும் தகுதிகாண் பருவம் துவங்கியும் ஆணை வழங்குதல்.

பார்வை:
1. அரசாணை எண்: 2151/பொபது/நாள்:27.12.1988.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்: 1150/பி.எஸ்.டி-(எச்-2)/2019/ நாள்:18.02.2019.
3. முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது. மற்றும் தலைமைப் பொறியாளர்,(பொது)., பொபது., சென்னை-5 அவர்களின் செ.மு. ஆ எண். எஸ்3(3) /25366/2019/ நாள்:25.02.2019.
4. தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், பொ.ப.து., நீர் ஆய்வு நிறுவனம், நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாடு, நீ.ஆ.து. சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண். அ1/636-6/2019/ நாள்:08.03.2019.
5. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்: நிஎ1/273/2019/(314) நாள்:14.03.2019.
6. உதவி செயற்பொறியாளர், பொபது., தரக்கட்டுப்பாடு உபகோட்டம், திருச்சி அவர்களின் கடித எண்: கோ2/உசெபொ/தகஉ/திருச்சி/2020/ நாள்:23.07.2020.

*****

பார்வை 2-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு தொகுதி-IVல் அடங்கிய 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018ஆம் ஆண்டுகளுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட செல்வி V. அகிலா பொன்மணி, (தமிழ்நாடு அரசு பணியாளர் வரிசை எண்: 133/2015-2018) பார்வை 3 முதல் 5 முடிய காணும் செயல்முறை ஆணைகளின்படி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணித்தொகுதி விதி10(a)(i)ன்படி பணிநியமனம் செய்யப்பட்டு இக்கோட்டத்தின் கீழ் இயங்கும் திருச்சி, பொபது., தரக்கட்டுப்பாடு உபகோட்ட அலுவலகத்தில் 15.03.2019 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

(த.பி.பா)

தனியர் இப்பதவியில் பணியேற்று கடந்த ஓராண்டில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படவில்லையாதலாலும், 01.06.2019 முதல் 07.07.2019 முடிய 37நாட்கள் மருத்துவ சான்றின் பேரில் சம்பளமில்லா அசாதாரண விடுப்பு துய்த்துள்ளதினாலும் ஓராண்டு பணிக்காலம் சரியானதாக நிறைவு செய்துள்ளதினாலும் பார்வை 1-ல் காணும் அரசாணையில் செயற்பொறியாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும் மற்றும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பொது விதி பகுதி II 23(a)(i)ன்படியும் செல்வி V. அகிலா பொன்மணி, இளநிலை உதவியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் முதன்முதலாக பணியேற்ற நாளான 15.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து செல்வி V. அகிலா பொன்மணி, இளநிலை உதவியாளருக்கு இப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 15.03.2019 முற்பகல் முதல் மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவம் துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின் விதி எண்:32-ன்படி தனியர் தனது தகுதிகாண் பருவத்தை மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகளில் நிறைவு செய்திட வேண்டும். மேலும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி எண் 34(a) இணைப்பு5-ல் கண்டுள்ளவாறு தகுதிகாண் பருவக் காலத்திறகுள் பவானிசாகர் அரசுப்பணியாளர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் பயிற்சியில் தேர்வு பெற வேண்டும் எனவும், தகுதிகாண் பருவ காலத்தில் வழக்குகள், தண்டனைகள் மற்றும் அசாதாரண விடுப்புகள் ஏதும் நிலுவையில் மற்றும் துய்க்காமல் இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையாக உள்ள வழக்கின் தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையின் அடிப்படையிலும் இப்பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

தனியர் தகுதிகாண்பருவம் நிறைவாணை வழங்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்து ஊதிய உயர்வுகளைப் பெறத் தகுதியுடையவராவார்.

இணைப்பு: பிற்சேர்க்கை-1

[signature] 29/7/2020
செயற்பொறியாளர், பொபது.,
தரக்கட்டுப்பாடு கோட்டம், திருச்சி-20.
29.7.2020

பெறுநர்
செல்வி V. அகிலா பொன்மணி,
இளநிலை உதவியாளர்,
வழி: உதவி செயற்பொறியாளர்,பொபது.,
தரக்கட்டுப்பாடு உபகோட்டம்,
திருச்சி-20.

உரியவருக்கு அனுப்பப்படுகிறது.

செல்வி. V. அகிலா பொன்மணி
இளநிலை உதவியாளர்,
தரக்கட்டுப்பாடு உபகோட்டம்,
திருச்சி

[signature] 04/08/20-
உதவி செயற் பொறியாளர், பொ.ப.து.,
தரக்கட்டுப்பாட்டு உப கோட்டம்,
திருச்சிராப்பள்ளி.

## பிற்சேர்க்கை

| வ.எண். | த.நா.அ.ப.தே. வரிசை எண் | பெயர், பிறந்த தேதி மற்றும் பதவி | முதன் முதலில் பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய நாள் | வழக்கு, தண்டனை மற்றும் அசாதாரண விடுப்பு துய்த்து தள்ளிப்போகும் நாள் | தகுதிகாண் பருவம் துவங்கப்படும் நாள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | வரிசை எண்: 133/2015-2018 | V. அகிலா பொன்மணி (பி.தே.07.06.1994), இளநிலை உதவியாளர் | 15.03.2019 முற்பகல் | 15.03.2019 முற்பகல் | 01.06.2019 முதல் 07.07.2019 முடிய 37 நாட்கள் சம்பளமில்லா அசாதாரண விடுப்பு மருத்துவ சான்றின் பேரில் | 15.03.2019 முற்பகல் |

Sd. ... 29/7/2020
செயற்பொறியாளர், பொபது.,
தரக்கட்டுப்பாடு கோட்டம், திருச்சி–20.

29.7.2020